**இந்திய உயர் ஸ்தானிகராலயம்**

**கொழும்பு**

**************

**<u>ஊடக அறிக்கை</u>**

இலங்கையில் இந்தியாவின் 71 ஆவது குடியரசு தின கொண்டாட்டங்கள்

<u>கொழும்பில் ரசிகர்களை கவர்ந்த ‘’டிவைன் குவாட்டட்” இசை நிகழ்ச்சி</u>

இந்தியாவின் முன்னணி இசைக்கலைஞர்களான கிராமி விருது பெற்ற பண்டித் விஷ்வ மோகன் பட் மற்றும் கிராமி விருதுக்கு பரிந்துரைக்கப்பட்ட பண்டித் சுபேன் சட்டர்ஜி ஆகியோரால் இந்தியாவின் 71 ஆவது குடியரசு தினத்தை முன்னிட்டு 2020 ஜனவரி 25 ஆம் திகதி BMICH இல் நடத்தப்பட்ட டிவைன் குவாட்டட் விசேட இசை நிகழ்வு கொழும்பின் இசை ரசிகர்களை தன்வசப்படுத்தியது . இந்த கலாசார நிகழ்வு கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தால் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது.

‘மோகன் வீணை” வித்வான் பண்டித் விஸ்வ மோகன் பட் மற்றும் சர்வதேச புகழ்பெற்ற தபேலா கலைஞர் பண்டித் சுபேன் சட்டர்ஜி ஆகியோர் தமது இசை நுணுக்கங்களால் சபையோரை மிகவும் பிரமிக்கவைத்த இந்த நிகழ்வில் 1500க்கும் அதிகமான விருந்தினர்கள் வருகைதந்திருந்தனர். பண்டித் விஸ்வ மோகன் பட் அவர்களின் மகன் ஶ்ரீ சலீல் பட் ‘சாத்வீக் வீணை” மூலமும் பண்டித் சுபேன் சட்டர்ஜியின் மகன் ஶ்ரீ சம்பித் சட்டர்ஜி ட்ரம்ப்ஸ் வாத்தியம் மூலமும் அணிசேர்த்து இந்த இசை அரங்கை மேலும் மெருகூட்டினர்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு சிறப்பித்த இந்த நிகழ்வு இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் தரண்ஜித் சிங் சந்து அவர்கள் தலைமையில் நடைபெற்றிருந்தது . அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், சிரேஸ்ட அதிகாரிகள், இராஜதந்திரிகள், மற்றும் இசை ரசிகர்கள் இந்த விசேட கலாசார நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.

இந்தியாவின் பாரம்பரிய ஓவியங்கள் என்ற தலைப்பில் விசேட கண்காட்சி ஒன்றும் பன்முகத்தன்மையில் ஐக்கியத்தை காண்பிக்கும் வகையில் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களையும் பிரதிநிதித்துவப் படுத்தும் நோக்கிலான , குறிப்பாக நாட்டுப்புற ஓவியங்கள் உட்பட பாரம்பரிய சித்திரங்களுடன் BMICH இல் நடத்தப்பட்டிருந்த நிலையில் பார்வையாளர்களால் மிகுந்த பாராட்டினை பெற்றிருந்தது . இந்திய – இலங்கை உறவின் உண்மையான உள்ளுணர்வை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் இலங்கை மற்றும் இந்தியாவை சேர்ந்த ஓவியர்களால் இந்த ஓவியங்கள் வரையப்பட்டிருந்தன.

*****************************************

கொழும்பு

26 ஜனவரி, 2020